

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2048 | ஜூன் 01, 2017 | புரட்சி 16 | முழக்கம் 20 | விலை: ரூ.3.00


# இராமனுக்கு கோயில் கட்ட துடிப்பவர்கள், ‘அவன்’ விரும்பிய மாட்டிறைச்சிக்கு ஏன் தடை போட வேண்டும்?

## கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிக்கை

பசுவதை தடைச்சட்டம் இந்தியா முழுமைக்கும் கொண்டுவரப்படவேண்டும் என்று ஆர்.எஸ்.எஸ்.தலைவர் மோகன் பகவத் மோடி ஆட்சிக்கு பிறப்பித்த ஆணையை அப்படியே ஏற்று மாநில அரசுகளை கலந்து ஆலோசிக்காமலேயே மத்திய அரசு சுற்றுச் சூழல் துறை வழியாக சந்தைகளில் கால்நடைகளை இறைச்சிக்காக விற்பதற்கு தடை போட்டு விட்டது.

பசுமாடு மட்டுமல்ல; காளை, எருமை, கன்றுக்குட்டி, ஒட்டகம் உள்ளிட்ட அனைத்து கால்நடைகளையும் இறைச்சிக்காக இனி சந்தைகளில் இந்தியா முழுவதும் விற்கக் கூடாதாம். சந்தைகளில் கால்நடைகளை விற்றால் விவசாயிகள் இறைச்சிக்காக விற்க வில்லை என்று எழுத்துப்பூர்வமாக உறுதி மொழி தரவேண்டுமாம். வாங்குவோர் விற்போர் இருவரும் நிலத்தின் உரிமைப்பத்திரம், விவசாயி என்பதற்கான அடையாள சான்று உள்ளிட்ட ஆவணங்களை அதிகாரிகளிடம் சமர்ப்பிக்க வேண்டுமாம். அப்படி வாங்கிய கால்நடைகளையும் அடுத்த 6 மாதத்திற்கு வேறு எவருக்கும் விற்கக்கூடாதாம். இப்படிக் கூறுகிறது மோடி ஆட்சியின் சட்டம்.

இனி ஒவ்வொரு வீட்டிலும் இறைச்சி சமைத்தால் சமைத்த உணவை கண்காணிப்புக் குழுவின் பரிசோதனைக்கு உட்படுத்தி சமைக்கப்பட்டது மாட்டிறைச்சி அல்ல என்று உள்ளூர் வருவாய் அலுவலர் கால்நடை மருத்துவரிடம் தடையில்லா சான்றிதழ் பெற்ற பிறகே சமைத்த உணவை குடும்பத்தினர் சாப்பிடவேண்டும் என்று அவசர சட்டம்கூட வரலாம்.

புத்தர் இயக்கம் செல்வாக்கு பெற்ற காலம் வரை மாட்டிறைச்சியை ருசித்து ரசித்து வயிறு முட்ட விழுங்கியவர்கள் வேத – புரோகித பார்ப்பனர்கள். பார்ப்பனர்கள் நடத்திய யாகங்களில் பசுக்களை கால்நடைகளை எரித்து பிறகு அவற்றை சுவைத்து உண்டார்கள் என்பதை வேதங்களே கூறுகின்றன.

இப்போது பிறப்பிக்கப்பட்டுள்ள மிருக வதை தடைச்சட்டத்தின்படி வேதங்களின் இந்த பகுதிகளுக்குத் தடை போட்டு, இதை பரப்புவதோ ஓதுவதோ கிரிமினல் குற்றம் என்று அறிவித்திருக்க வேண்டும். அதைச் செய் வார்களா?

மிருகவதையை நியாயப்படுத்தும் வேதங்களைத் தடை செய் என்று வலியுறுத்தி வேத எரிப்புப்போராட்டத்தைத்தான் இனி நாம் தொடங்கவேண்டியிருக்கும்.

இராமனுக்கு கோயில் கட்டத்துடிப்பவர்கள் ராமன் மிகவும் விரும்பிச் சாப்பிட்ட மாட்டுக் கறிக்கு ஏன் தடை போடுகிறார்கள்?

மோடி ஆட்சியின் இந்த சர்வாதிகாரச் சட்டம் விளிம்பு நிலை மக்களுக்கும் சிறுபான்மை சமூகத்திற்கும் விவசாயி களுக்கும் எதிராக கொண்டுவரப்பட்ட சட்டம், தனது வாழ்வாதரத்திற்குப் போராடும் விவசாயி பயன்தராத மாடுகளைத் தீவனத்துக்குக் கேடாய் எப்படி காப்பாற்றிக் கொண்டிருக்க முடியும்? இந்த அதிகார அடக்குமுறையை மக்களை பொறுமையாக சகித்துக் கொண் டிருக்கவே மாட்டார்கள்.

தமிழ்நாட்டில் திமுக, விடுதலை சிறுத்தைகள் கட்சி, மார்க்சிஸ்ட் கம்னியூஸ்ட் கட்சி, விவசாயிகள் அமைப்பு, கால்நடை விற்பனையாளர்கள் என்று பல்வேறு அமைப்பு களிலிருந்தும் உடனடியாக கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கேரள மாநில முதல்வர் இதனை ஆர்.எஸ்.எஸ். செயல் திட்டம் என்றுகூறி கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். மாநில உரிமைகளை காலில் போட்டு மிதித்து மக்களின் வாழ்வாதாரம் உணவு உரிமைகளை தடுக்கும், ஒடுக்கப்பட்ட, சிறுபான்மை விளிம்பு நிலை மக்களின் தொழில் வணிகங்களும் பொருளாதார நெருக்கடிகளை உருவாக்கியுள்ளன.

அனைத்திற்கும் மேலாக இந்தியா முழுமைக்கும் ஆர்.எஸ்.எஸ். அதிகார கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரக்கூடிய முயற்சியே இது. பார்ப்பனீயமே இந்தியா; பார்ப்பனப் பண்பாட்டை ஏற்று அடிபணிந்து ஏற்று வாழவேண்டும் என்பதே குடிமக்களின் கடமை என்ற ஒற்றைப் பார்ப்பன கலாச்சாரத் திணிப்பை நிலை நிறுத்துகிறது.

இந்த பச்சைப் பார்ப்பன பாசிச சட்டத்தை எதிர்த்து தமிழகம் போராட்ட களமாக மாற வேண்டும்!

கழகத்தோழர்கள் ஒத்த கருத்துடைய கட்சிகள் இயக்கங்கள் ஒன்றிணைந்து ஒரே குரலில் இந்த சட்டத்தை திரும்பப்பெற வைக்கும் போராட்டங்களை உடனே தொடங்கிட உரிய களப்பணிகளை மேற் கொள்ள வேண்டுகிறேன்.

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# உக்கம்பருத்திக்காட்டில் கழகத்தின் இரண்டு நாள் பெரியாரியல் பயிலரங்கம்



*சேலம் மாவட்டம், கொளத்தூர் ஒன்றியம், காவலாண்டியூர் கிளை கழக சார்பில் 24, 25.05.2017 ஆகிய இரண்டு நாள்கள் கொளத்தூர் உக்கம்பருத்திக்காடு பெரியார் படிப்பகத்தில் பெரியாரியல் பயிலரங்கம் நடைபெற்றது. இப்பயிலரங்கில் முதல்நாள் முதல் வகுப்பு “மதவாத அரசியல்” (முஸ்லிம், மாட்டுகறி, சமஸ்கிருதம்) எனும் தலைப்பில் பேராசிரியர் சுந்தரவள்ளி வகுப்பு எடுத்தார். மதியம் உணவு இடைவேளைக்குப் பிறகு “பெரியாருக்கு முன்னும் பின்னும்; நீதிகட்சி சாதனைகள்” குறித்து புலவர் செந்தலை கவுதமன் வகுப்பு எடுத்தார். தேநீர் இடைவேளைக்கு பிறகு “தி.வி.க. உங்களிடம் எதிர்பார்ப்பது” எனும் தலைப்பில் விடுதலை இராசேந்திரன், “இடஒதுக்கீடு - ஓர் அறிமுகம்” எனும் தலைப்பில் பால்பிரபாகரன் ஆகியோர் வகுப்பு எடுத்தனர். இரவு 8.30 மணிக்கு முதல் நாள் வகுப்பு முடிவுற்றது. இரவு உணவுக்கு பின் குறும்படங்கள் திரையிடப்பட்டன.*

*25.5.17 அன்று காலை “உலகின் தோற்றம் உயிர்களின் தோற்றம்” குறித்து மருத்துவர் எழிலன் வகுப்பு எடுத்தார். தொடர்ந்து “ஜாதி தோற்றம், இருப்பு, ஒழிப்பு” எனும் தலைப்பில் விடுதலை இராசேந்திரன், “கடவுள் மறுப்பு” குறித்து கொளத்தூர் மணி, “சோதிடப் புரட்டு” குறித்து மருத்துவர் எழிலன் ஆகியோர் வகுப்புகள் எடுத்தனர். தொடர்ந்து முதல் நிலைத் தோழர்கள் வீதி நாடக நிகழ்ச்சியை சிறப்பாக நடத்தினர். தோழர்கள் இரண்யா, பரத் இந்த நாடகத்தை சிறப்பாக உருவாக்கியிருந்தனர். தொடர்ந்து பயிற்சியில் கலந்து கொண்ட தோழர்களின் அய்யங்களுக்கு விளக்கங்கள் தரப்பட்டன. இரண்டு நாட்கள் தொடர்ந்து பயிற்சியில் கலந்துகொண்ட தோழர்களுக்கு மட்டும் சான்றிதழ் தரப்பட்டது. இரண்டு நாள் பயிலரங்கத்திற்கான உணவு செலவுகளை காவலாண்டியூர் கிளை கழகமும், தோழர்கள் தங்குமிடம் உக்கம் பருத்திக்காடு பெரியார் படிப்பக பராமரிப்பு வேலைகளை உக்கம்பருத்திக்காடு கிளை கழகமும் ஏற்று சிறப்பாக ஏற்பாடு செய்தனர்.*

*முதல்நிலைத் தோழர்களுக்கு தோழர்கள் இரண்யா, பரத் ஆகியோர் மூடநம்பிக்கை குறித்து விளக்கம் மற்றும் பாடல், வீதி நாடகப் பயிற்சி அளித்தனர். இரண்டாம் நாள் மதிய நேரத்தில் குழந்தைகளுக்கான பேய் குறித்த பயத்தை போக்க சுடுகாட்டிற்கு குழந்தைகளை அழைத்துச் சென்று ஒரு பிணக்குழியை சுற்றி நிற்க வைத்து கடவுள், பேய் போன்றவை இல்லை எல்லாம் மன பயமே இதிலிருந்து குழந்தைகள் விடுபட வேண்டும் என விளக்கினர். அதே இடத்தில் குழந்தைகளின் கையில் கோழிக்கறியை கொடுத்து உண்ணச் செய்தனர். இருநாள் பயிலரங்கத்திலும் 100 இளம் தோழர்கள் பங்கேற்று பயன் பெற்றனர்.*

**- நமது செய்தியாளர்**

# கொள்கை-கொண்டாட்டம்-சுற்றுலா என குழந்தைகளுக்கு உணர்வூட்டிய பெங்களூரு பழகு முகாம்






தமிழ்நாடு அறிவியல் மன்றம் ஐந்தாவது ஆண்டாக நடத்திய குழந்தைகள் பழகு மகிழ்வு முகாம் - 2017 இம் முறை பெங்களூருவில் நடத்தப் பட்டது. தமிழ்நாட்டில் சென்னை, மயிலாடுதுறை, பேராவூரணி, சேலம், மேட்டூர், ஈரோடு, திருப்பூர், கோவை, ஆகிய மாவட்டங்களில் இருந்து 60 குழந்தைகளும் பெங்களூருவில் 4 குழந்தைகளுமாக 64 பேர் கலந்துகொண்டனர். 14 பேர் நெறி யாளர்களாக இருந்து முகாமை நெறிப்படுத்தினர்.

12.5.2017 வெள்ளிக்கிழமை மதியம் 1.30 மணிக்கு பெங்களூர் எக்ஸ்பிரஸ் தொடர் வண்டியில் குழந்தைகள் நெறியாளர்கள் அனைவரும் பெங்களூரு புறப்பட்டனர். குழந்தைகளை தொடர் வண்டி நிலையத்திலிருந்து பயிற்சி நடக்கும் இடத்திற்கு அழைத்துச் செல்ல சொகுசுப் பேருந்துடன் பெங்களூருவில் தோழர்கள் காத்திருந்தனர். இரவு 10.00 மணியளவில் முகாம் நடக்கும் ஐஎஸ்ஐ பயிற்சி மையத்தை அடைந்தனர்.

13.5.2017 முதல் நாள் முதல் நாள் தொடக்க விழாவுடன் முகாம் தொடங்கியது. முகாமைத் தொடங்கி வைத்து வாழ்த்துரை வழங்கியோர் ‘கற்பி, ஒன்று சேர்’ (Educate and Organize) அமைப்பின் கர்நாடக மாநில தலைவர் ஜார்ஜ், தலித் சமரசேனா நிறுவனர் கணேஷ், வழக்கறிஞர் பெங்களூரு அருண், தி.வி.க. தோழர் கணேஷ், தனது வாழ்த்துரையில் தாங்கள் அம்பேத்கரின் கொள்கை வழியில் சமூகப் பணி செய்து வருவது குறித்தும், பெரியாரின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டியதும் நமது கடந்த கால வரலாறு தலைவர்கள் குறித்து குழந்தைகள் தெரிந்து கொள்ள வேண்டியதும் காலத்தின் தேவை என்று கூறினார். வாழ்த்திப் பேசிய அனைவரும் தமிழ்நாடு அறிவியல் மன்றத்தின் பழகு மகிழ்வு முகாம் ஏற்பாடுகள் குறித்து வியப்புடன் பாராட்டிப் பேசினர். வாழ்த்துரை முகாம் அறிமுகம், பயிற்றுநர் அறிமுகம் முடிந்து சுயஅறிமுகம் தொடங்கியது. ஏற்கனவே முகாம்களில் கலந்து கொண்ட குழந்தைகள் புதிய குழந்தைகள் அனைவரும் தங்களை அறிமுகம் செய்து கொண்டனர். இந்நிகழ்வு விளையாட்டுடன் கூடிய நிகழ்வாக நீலாவதி, சந்திரமோகன் ஆகியோரால் நடத்தப்பட்டது. உணவிற்குப்பின்னர் நாடகப் பயிற்சி ஓவியப்பயிற்சி இசைப்பயிற்சி ஆகியவற்றிற்கு குழுக்கள் பிரிக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டது. அத்துடன் வயது அடிப்படையில் சிறியோர் இளையோர் குழுக்களும் பிரிக்கப்பட்டனர். பின்னர் தற்காப்புக்கலை வகுப்பு நடத்தப்பட்டது. இதில் தடுத்தல், தற்காப்பு, தாக்குதல் முறைகளின் நுட்பம் பற்றிய செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது. மாலை வகுப்பாக ஆண் குழந்தைகளுக்கும் பெண் குழந்தைகளுக்கும் உடலியல், உளவியல் கலந்துரையாடல் நிகழ்த்தப்பட்டது. இதில் உடல் வளர்ச்சி உளவியல் மாற்றங்கள், பதின்ம வயதின் ஈர்ப்பு, அதைக் கடந்து செல்லுதல் ஆகியன குறித்த விவாதங்கள் நடத்தப்பட்டன.

14.5.2017 இரண்டாம் நாள் காலை முதல் நாள் குறித்த ஆய்வுடன் தொடங்கியது. குழந்தைகள் முதல் வகுப்புகள் குறித்து கருத்து கூறினர்.

சிறியோர் குழுவிற்கு பேய், பிசாசு, சொர்க்கம், நரகம் பற்றிய மூட நம்பிக்கைகள் பேயாடுதல், பேயோட்டுதல் குறித்து அதன் அறிவியல் விளக்கம் சிவகாமி, தமிழ்ச்செல்வன் ஆகியோர் வகுப்புகள் எடுத்தனர். இளையோர் குழுவிற்கு, “நான் யார்?” என்பது குறித்த தேடல், “ஒரு சொல் வழி உலகம்” என்ற தலைப்பிலான கற்பித்தல் முறைகள் வகுப்பினை மணிமாறன் நெறிப்படுத்தினார்.

பிற்பகல் நாடகம், இசை, ஓவியப் பயிற்சிகள் தற்காப்புக்கலை வகுப்புகள் நடந்தன. இளை யோருக்கு இட ஒதுக்கீடும் அவற்றின் தேவைகளும் குறித்து சிவகாமி வகுப்பு எடுத்தார்.

16.5.2017 மூன்றாம் நாள் 15.5.2017 இல் நடந்த நிகழ்வுகளின் மீதான குழந்தைகள் கருத்துக் கூறலுடன் தொடங்கியது. மூன்றாம் நாள் நிகழ்வு. முகாமைச் செம்மையாக நடத்துவதற்கான வழிமுறை களையும் குழந்தைகள் விவாதித்தனர்.

பின்னர் தற்காப்புக்கலை வகுப்பு இளையோருக் கும், திறன்வளர்ப்பு சிறியோருக்கும் நடத்தப்பட்டது.

**விவாதங்களைத் தூண்டிய வகுப்பு**

பிற்பகல் சமூகக் கல்வி நிறுவனத்தின் நிறுவனர் சியாம் சுந்தர், மோனிகா, “குழந்தைகள் உரிமை” என்ற தலைப்பில் வகுப்பு எடுத்தனர். பல்வேறு துணைக் கருவிகள், விளையாட்டு முறைகளைப் பயன் படுத்தியும் விவாதங்கள் மூலமும் குழந்தைகளுக்கான உரிமைகள், அவற்றை செயல்படுத்த வேண்டிய கடமை யாருக்கு உள்ளது என்பது குறித்தும் தெளிவான கருத்துக்களைக் கூறுவதாக இவ்வகுப்பு அமைந்தது. மாலை இளையோருக்கு பேய், பிசாசு சொர்க்கம், நரகம் குறித்து ஆசிரியர் வீரா கார்த்தி வகுப்பு எடுத்தார். செயல்முறை விளக்கம் நடிப்புடன் கூடிய இவ்வகுப்பு குழந்தைகளிடையே எண்ணற்ற கேள்விகளைத் தூண்டி விடைதேடச் செய்த வகுப்பாக அமைந்தது. வகுப்பு முடிந்த பின்னரும் குழந்தைகள் இது குறித்து விவாதித்துக் கொண்டிருந்தனர். சிறியோர் வாசிப்பு வகுப்பை மணிமொழி, சுதா, பொன்மயில், பாரதி ஆகியோர் நெறிப்படுத்தி வாசிப்பை ஊக்குவித்தனர்.

16.5.2017 நான்காம் நாள் சுற்றுலா நாள், பெங்களூருவில் அமைக்கப்பட்டிருந்த பொருட் காட்சியில் மீன்கள், பறவைகள் கண்காட்சியைக் குழந்தைகள் பார்வையிட்டனர். அழிந்து போன பழங்கால உயிரினங்கள் உயிருடன் இருப்பது போன்ற கண்காட்சி அரங்கையும் பார்த்து களித்தனர். பின்னர் லால்பூங்காவிற்குச் சென்று அங்குள்ள ஏரியைக் கண்டுகளித்தனர். பூங்காவில் விளையாட்டு, நாடகப் பயிற்சி நடந்தது. சுற்றுலா நாளன்று குழந்தைகளுக்கான விளையாட்டுகள், பயிற்சிகளை நீலாவதி சந்திரமோகன் ஆகியோர் மேற் கொண்டனர்.

17.5.2017 முகாமின் இறுதி நாளன்று நிறைவு விழாவாக நடந்த ஐஎஸ்ஐ வளாகத்தில் மிகப் பெரிய அரங்கு நமக்கு தரப்பட்டது. அங்கே குழந்தைகளின் படைப்புகளைக் கொண்டு அவர்களே மேடையை அழகுபடுத்தினர். முதல் நிகழ்வாக முகாமில் பயிற்சி எடுத்த 2 நாடகங்கள் நிகழ்த்திக் காட்டப்பட்டன. ஒரு பாடல் பாடப்பட்டது. பின்னர் குழந்தைகள், ஆசிரியர்கள் முகாம் குறித்த நிறை குறைகளைப் பற்றிய நமது கருத்துக்களைக் கூறினர். நாடகப் பயிற்றுநர் சந்திரமோகன் தனது அனுபவங்களைப் பதிவு செய்தார். வாழ்த்துரையாக தலித் சமரசேனா கணேஷ், கற்பி ஒன்று சேர் ஜார்ஜ், கர்நாடகத் தமிழ்மக்கள் இயக்கம் பன்முகம், தி.வி.க பழனி, வழக்கறிஞர் பெங்களூரு அருண் ஆகியோர் பேசினர். இந்நிகழ்வில் சித்தார்த்தன் முயற்சியால் பக்தர்களுக்கு “100 கேள்விகள்” என்ற புத்தகம் கன்னடத்தில் மொழி பெயர்க்கப்பட்டு தி.வி.க. தலைவர் கொளத்தூர் மணி வெளியிட கணேஷ் பெற்றுக்கொண்டார். முகாம் வரவு செலவு அறிக்கையை பொருளாளர் தமிழ்ச்செல்வன் வாசித்தார். இறுதியாக குழந்தைகளுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது. கழகத் தலைவர் சிறப்புரையாற்றினார். மதிய உணவுடன் முகாம் நிறைவடைந்தது.

முகாமில் பங்கேற்க கருத்தாளர்கள் அனைவரும் சிறப்புற பணியாற்றினர். பவானி சாகர் கோமதி - ஓவியம், கைவினைப் பொருள்கள் குறித்து பயிற்சியளித்தார். பாடல் வகுப்பை யாழினி, பொன்மயில் ஆகியோரும் நாடகப் பயிற்சியை BUFTO பயிற்றுநர் சந்திரமோகன் நெறிப்படுத்தினர். குழந்தைகள் நடிப்பில் பல்வேறு நுணுக்கங்களை ஆர்வத்துடன் அறிந்து கொண்டு வெளிப்படுத்தினர். கோபி மணிமொழி, மேட்டூர் சுதா, சென்னை பாரதி, காஞ்சிபுரம் பொன்மயில், சென்னை மணிமேகலை ஆகியோர் குழந்தைகள் தேவைகள் பிரச்சனைகள் குறித்து சிறப்பு கவனம் செலுத்தினர். அத்துடன் அனைத்து வகுப்புகளையும் முழுமையாகக் கவனித்து குறிப்பு எடுத்து அதன் நிறை, குறைகளை விவாதித்தனர். தாங்களும் பழகு மகிழ்வு முகாமில் கருத்தாளர்களாகப் பங்கெடுப்போம் என்ற கருத்தையும் தெரிவித்தனர். திருப்பூர் தனகோபால் ஐந்து நாட்கள் நிகழ்வையும் காணொளிக் காட்சியாகவும், புகைப்படமாகவும் பதிவு செய்தார். தற்காப்புக் கலை பயிற்சியை தமிழ்நாடு உதைக் குத்து, சண்டை கழகத்தின் துணைப்பொதுச்செயலாளர் சூலூர் சிவக்குமார் அளித்தார். சிறப்பான பயிற்சியாக அது அமைந்தது. தொடர்ந்தும் பயிற்சி எடுக்க சில குழந்தைகள் ஆர்வம் தெரிவித்தனர்.

வேறொரு மாநிலத்தில் முகாம் நடத்துகிறோம். என்ற உணர்வே வராதவாறு பெங்களூரு தோழர்கள் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்து இருந்தனர்.

சரவணன், பிரபு பேராசிரியர் லூர்துநாதன் ஆகியோர் உடனிருந்து உதவி செய்து நெகிழச் செய்தனர். முகாமிற்கு இடம் பார்த்த நாள் முதல் இறுதியாக தொடர்வண்டியில் ஏற்றிவிடும் வரை உடனிருந்தும், வாகன வசதி செய்து கொடுத்தும் இன்னும் பல உதவிகளையும் செய்தவர்கள் சித்தார்த், ஜார்ஜ். அதுமட்டுமல்லாமல் ஒரு குழந்தைகளுக்கு ரூ.485 ஒரு நாளைக்கு கட்டணம் ரூ.340 என்ற அளவில் குறைத்துப் பேசியும் வகுப்பு நடந்த அரங்கின் கட்டணமின்றியும் பெற்றுத் தந்தவர் ஜார்ஜ். இது பெருமளவிற்கான பொருளாதார உதவியாக அமைந்தது. 5 நாள்களும் நம்மோடு உடனிருந்து உற்ற தோழராய் உதவி செய்தவர் ஜோதி. பெற்றோர்களான திருப்பூர் பாண்டியன் குமரேசன் ஆகியோர் தாங்களாகவே முன்வந்து முதல் நாள் உடனிருந்து உதவி செய்தும் நெகிழ்வில் இருந்தது.

முகாமில் பங்கேற்ற குழந்தைகள் வழக்கமாக உணவு, தங்குமிடம் குறித்து ஏதேனும் மாற்றம் கூறுவார்கள். ஆனால் இம்முறை அவை குறித்த சிறப்புக் கருத்துக்களைத் தெரிவிக்காமல் கொண்டாட்டம் நட்புணர்வு பயிற்சிகள் என

(4ஆம் பக்கம்)

# பெரியார் பேசிய பகுத்தறிவு - மேற்கத்திய இறக்குமதி அல்ல!

மார்க்சிய சிந்தனையாளரும் இந்திய தத்துவ மரபுகள் குறித்து ஆய்வு நூல்களை எழுதியவருமான பேராசிரியர் ந.முத்து மோகன், 'உங்கள் நூலகம்' மாத இதழுக்கு (ஏப். 2017) அளித்துள்ள பேட்டி இது. (சென்ற இதழ் தொடர்ச்சி)

*சுயமரியாதை, பகுத்தறிவு, மானம், அறிவு ஆகிய பெரியாரின் சொல்லாடல்களை எவ்வாறு புரிந்து கொள்வது? குறிப்பாக, பெரியாரின் பகுத்தறிவு வாதம் நவீன ஐரோப்பாவின் அறிவு வாதம் (ரேசனலிசம்) போன்றதா?*

பெரியாருடைய சுயமரியாதை, பகுத்தறிவு, மானம் அல்லது தன்மானம், அறிவு முதலான கருத்துகள் மேற்கத்திய ரேசனலிச (மேல் நாட்டு பகுத்தறிவு வாதம்) சாயல் கொண்ட கருத்துகள் போலத் தோற்றம் அளிக்கும். ஆனால், பெரியார் மேற்கத்திய பகுத்தறிவு வாதங்களை எல்லாம் கற்றுத் தேர்ந்து, ஓர் அறிவுத்தளத்தில் நின்று அவற்றைக் கையாண்டார் என்பது மாதிரியெல்லாம் எனக்குத் தெரியவில்லை. அவரிடம் ஓர் உள்ளூர் தன்மை உண்டு. அதாவது இங்குள்ள சமூக-பொருளாதார-பண்பாட்டு-அரசியல் தளங்களில் நின்று இந்தச் சொற்களை உருவாக்கினார் போலத் தெரிகின்றது.

காங்கிரஸ்காரர்கள் சுயராஜ்யம் என்று வைத்ததற்கு எதிராகப் பெரியார் சுயமரியாதை என்பதை உருவாக்கினார் என்று நினைக்கிறேன். டொமினியன் அந்தஸ்து, அரசியல் அதிகாரப் பங்கீடு, அரசியல் சுதந்திரம் என்ற பல தளங்களில் வைத்து சுயராஜ்யம் என்ற சொல்லைப் பயன்படுத்தினார்கள். பெரியார் சுயமரியாதை என்பதை மனிதனுக்கானதாக முன் வைத்தார். காங்கிரஸ்காரர்கள் அரசை, அரசியல் அதிகாரம் என்பனவற்றை மனதில் இருத்திக் கொண்டு சுயராஜ்யம் குறித்துப் பேசினார்கள். அது இந்துத்துவவாதிகளுக்குச் சுயராஷ்டிரம் ஆகிவிடுகின்றது. பெரியார் மனிதரின் சுரணையைச் சீண்டக்கூடிய சுயமரியாதை குறித்துப் பேசினார். "உன் அம்மா இப்படித்தான் உன்னை அடிமையாகப் பெற்றாளா?" என்பதுபோல கேள்வி கேட்ட, மனிதரின் கோபத்தை, ரோசத்தை சீண்டுகிறதுதான் சுயமரியாதைக் கருத்தாக்கம். இதற்கு ஒப்புமையான ஐரோப்பியக் கருத்தாக்கம் என்றெல்லாம் தேட வேண்டியதில்லை; பார்க்க வேண்டிய அவசியமும் இல்லை. இது தனிமனித வாதமும் இல்லை. சுயமரியாதையை ஆங்கிலத்தில் "self-dignity" என்று சொல்லலாம். "self-respect" என்று மொழியாக்கம் செய்கின்றார்கள். ஆனால் இந்தக் கருத்தை உள்ளூர் சூழலிலிருந்துதான் எடுத்துள்ளார்; உருவாக்கியுள்ளார்.

பகுத்தறிவு என்பதும் அப்படித்தான். பகுத்தறிவு என்பதைத் துல்லியமான ஆங்கிலத்தில் சொன்னால் analytical approach என்று மொழி பெயர்க்கலாம். ஐரோப்பாவில் analytical என்பதற்கு ஆங்கில அகராதிகள் பக்கம் பக்கமாக விளக்கங்கள் தருகின்றன. ஆனால் பகுத்தறிவு என்பது analytical என்ற கருத்தைப் பெற்றிருந்தாலும், அது மட்டுமல்ல. பகுத்தறிவு என்பதில், பகுத்துப் பார்த்துப் பிரித்தறிதல் என்பதெல்லாம் வருகின்றது. ஐரோப்பாவில் analysis என்றால், அதற்கு இணையாக synthesis என்பது உண்டு. ஆனால் synthesis என்பதற்குத் தொகுப்பு, இணைவாக்கம் என்பன போன்ற தமிழ்ச் சொல் உருவாக்க முயற்சியையே இப்போதுதான் சில கட்டுரைகளில் காண முடிகின்றது. Thesis, antithesis, synthesis என்றெல்லாம் வரும்போது இந்தத் தமிழ்ச் சொல்லாக்க முயற்சியும் தொடங்கியது. ஆனால், ஐரோப்பாவில் synthesis என்பதற்கு இணையாக analysis பயன்படுத்தப்பட்ட மாதிரி, பகுத்தறிவு என்பதைப் பெரியார் பயன்படுத்தவில்லை.

ஐரோப்பிய தத்துவங்களில் நேர் காட்சிவாதத்தில் analytical school என்றொரு சிந்தனைப்பள்ளி உண்டு. இந்த அர்த்தத்திலும் பெரியார் பயன்படுத்த வில்லை. அவர் பகுத்தறிவு என்பதற்கு அனுபவப் பூர்வமாகப் பார்த்தல், இயற்கைக்கு முரணில்லாமல் பார்த்தல், மனிதத் தன்மை கொண்டு பார்த்தல் என்ற அர்த்தங்களைத் தருவிக்கின்றார். பெரியாரிடம் அனுபவப்பூர்வமாகப் பார்த்தல் என்பது வலுவாக இருக்கும். இது மனிதருக்கு இயற்கை உணர்ச்சி என்பார். ஆகவே பெரியார் பகுத்தறிவு என்பதை ஐரோப்பாவிலிருந்து எடுக்கவில்லை.

பல சமயங்களில் அண்ணா, கருணாநிதி ஆகியோரெல்லாம்கூட, அங்கே அவர் சொன்னார், இங்கே இவர் சொன்னார் என்றெல்லாம் பேசுவார்கள். இந்த மாதிரியான அலம்பல் பேச்செல்லாம் பெரியாரிடம் கிடையாது. முழு மனிதத் தன்மையோடு மிக எளிமையாகப் பெரியார் பேசுவார். இது ஒரு மாதிரியான பட்டறிவு தன்மை ஆகும். இதை



**அலம்பல் பேச்செல்லாம் பெரியாரிடம் கிடையாது. முழு மனிதத் தன்மையோடு மிக எளிமையாகப் பெரியார் பேசுவார்.**

இன்னும் கவனமாக உற்றுநோக்க வேண்டும்.

பெரியாரிடம் காணப்படும் மதம் என்பது இயற்கைக்கு மாறானது, எதிரானது என்ற வாதம் நீட்சேவிடம் உண்டு. கிறிஸ்துவத்தை விமர்சிக்கும் போது நீட்சே, துறவு என்பது இயற்கைக்கு எதிரானது, மாறானது என்பார். பெரியாரைப் படிக்கும்போது நான் இதை உணர்ந்துள்ளேன். ஆனால் இந்த வாதத்தை நீட்சேவிடமிருந்து எடுத்தார் என்றும் சொல்ல முடியாது. சுதந்திரமாக இந்த வாதத்தைப் பெரியார் உண்டாக்கியுள்ளார். பெர்னாட்ஷா முதலான ஒரு சில பகுத்தறிவு வாதிகளை அவர் படித்திருக்கலாம்.

மறுமலர்ச்சிக்கால ஐரோப்பாவில், அறிவை முதன்மைப்படுத்துகிற sensualism அல்லது empiricism, Rationalism ஆகிய இரண்டு தத்துவப் பள்ளிகள் தோன்றின. Empiricism என்பது புலன் சார்ந்த அறிவு என்பது பற்றியது ஆகும். இன்னும் கொஞ்சம் விரித்து நோக்கினால், அனுபவம் சார்ந்த அறிவு என்பது ஆகும். Rationalism என்பது லாஜிக்கில் உள்ள a prior என்ற இலத்தின் சொல் குறிக்கும் அனுபவம் சாராத அபூர்வமான அறிவு என்பது பற்றியது ஆகும். மனதிற்குள்ளிருந்து எழுகின்ற, உள்ளங்கை நெல்லிக்கனிப் போலத் தெரிகின்ற ஒன்றுதான் reason என்பதற்கு கறாரான வரையறை ஆகும். இதற்குப் பல நேரங்களில் நிரூபணம் கூட இருக்காது. கணிதம் சார்ந்த அருவச் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு தெகார்த், லைப்னிஸ் போன்றோர் ரேசனலிசத்தை ஒரு தத்துவமாக நிறுவினார்கள். இத்தத்துவத்தில் கணித அடிப்படைகளிலிருந்து வரவழைக்கப்படும் அறிவுக்கு அனுபவம் சார்ந்த நிரூபணம் தேவையில்லை. அவசியமில்லை. அந்த அளவுக்கு அவர்கள் அறிவை உச்சாணி கொம்புக்குக் கொண்டு சென்று விட்டார்கள். அமைப்பியல் வாதத்தில் பைனரிகள் - எதிரிணை நிலைகள் மனித மனத்திலேயே இருக்கின்றன என்பதை இம்மானுவேல் காண்டிலிருந்து எடுத்து வாதிடுவார்கள். காண்ட் antinomies என்பது மனித மனத்தில் உள்ளார்ந்து உள்ளது என்றார். ஒரு கட்டத்தில் ரேசனலிசத்தில் அறிவை மறைஞானத் தன்மை கொண்டதாக, அனுபூதத் தன்மை கொண்டதாக மாற்றினார்கள். ஆகவே ஐரோப்பாவின் ரேசனலிசத்தில் உள்ள கூறுகள் எவைவும் பெரியாரிடம் இல்லை. அனுபவம் சார்ந்த அறிவுவாதக் கூறுகள், empiricism - எம்பிரிசிசக் கூறுகள் பெரியாரிடம் உண்டு.

ஐரோப்பியத் தத்துவங்களில் நேர்க்காட்சிவாதம், பயன்பாட்டுவாதம், மார்க்சியம் ஆகிய மூன்று தத்துவங்களின் சாயலை, செல்வாக்கைப் பெரியாரிடத்தில் காணமுடியும். நேர்க்காட்சி வாதத்தின் அனுபவம் சார்ந்த அறிவு என்ற செல்வாக்கு பெரியாரிடத்து உண்டு. ஒன்றின் பயன்பாட்டை வலியுறுத்தும் பயன்பாட்டுவாதத்தின் செல்வாக்கும் அவரிடம் உண்டு. பெரியார் எதனொன்றின் பயன்பாடு பற்றியும் அடிக்கடிக் கேள்வி எழுப்புவார். நவீன விஞ்ஞானங்களை எதற்காக எடுத்துக்கொள்ள வேண்டுமென்றால், அவற்றின் ரேசனாலிட்டி என்பதைக் கருதியல்ல, அவற்றின் பயன்பாடு கருதி எடுத்துக்கொள்ள வேண்டும் என்பார் பெரியார். இதே போல மார்க்சியத்திலும் சில கூறுகளைப் பெரியார் எடுத்துக் கொள்வார். இந்த மூன்று தத்துவங்களோடும் பெரியார் தொடர்பு வைத்துக் கொள்வார். உடன்பாடுடைய இடத்தில் அவற்றின் செல்வாக்கை ஏற்றுக் கொள்வார். மாறுபாடுடைய இடத்தில் அவற்றை மறுத்துவிடுவார். அத் தத்துவங்கள் பற்றி பெரியாருக்கு என்ன படுகிறது என்பதுதான் முக்கியம். இதையெல்லாம் ரேசனலிசம் என்று ஆங்கிலத்திலும் நீங்கள் போட்டிருப்பதால் சொன்னேன்.

மற்றபடிக்கு, இயற்கையாய் இருத்தல், இயற்கை உணர்ச்சிக்கு மதிப்பளித்தல், இன்ப நாட்டம், சுதந்திரம் ஆகிய அறிவொளி இயக்கச் சிந்தனைகள் மீது பெரியாருக்கு ஈர்ப்பு உண்டு. ரூசோ, வால்டேர் ஆகியோரை மேற்கோள் காட்டிப் பேசியுள்ளார். ஆனால் ரேசனலிசம் என்றால், எந்த அர்த்தத்தில் அச்சொல்லைப் பயன்படுத்துகிறோம் என்பதுடன் தான், பெரியாரை அதனுடன் தொடர்புபடுத்தலாமா, இல்லையா என்பதை யோசிக்க முடியும். தெகார்த்தின் ரேசனலிசச் சிந்தனையுடன் பெரியார் சிந்தனை ஒத்துப்போகாது. (தொடரும்)

## பெங்களூருவில் 30 தலித் அமைப்புகள் இணைந்து நடத்திய அம்பேத்கர் பிறந்த நாள்



27.5.2017 சனிக்கிழமை மாலை 6.00 மணியளவில், பெங்களூரு ஸ்ரீராம்புரத்தில் தலித் புலிகள் கூட்டமைப்பு, விடுதலை சிறுத்தைகள் கட்சி ஆகியோரின் ஒருங்கிணைப்பில் புரட்சியாளர் அம்பேத்கரின் 126ஆவது பிறந்தநாள் விழா நடைபெற்றது. நிகழ்வின் தொடக்கத்தில் கானா பாடகர் உலகநாதனின் இசை நிகழ்வு நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து தலித் சிறுத்தைகள் கட்சியின் தலித் நாகராஜ், மனித உரிமைப் போராளி முனைவர் ரூத் மனோரமா, பகுஜன் சமூக நிறுவனத்தின் தேசிய செயலாளர் கோபால் ஆகியோரின் உரையைத் தொடர்ந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி, விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமா வளவன், இந்தியக் குடியரசுக் கட்சியின் தலைவரும், புரட்சியாளர் அம்பேத்கரின் பேரனுமான பிரகாஷ் அம்பேத்கர்ஆகியோர் சிறப்புரையாற்றினர். நிகழ்வில் பல்வேறு தலித் அமைப்புகளின் தலைவர்கள் பாராட்டப்பட்டனர்.

## காந்தி படுகொலையில் அவிழ்க்கப்படாத மர்ம முடிச்சுகள்

காந்தி கொலையில் இன்னும் பல மர்ம முடிச்சுகள் அவிழ்க்கப்படவில்லை. இது குறித்து ஏற்கனவே 1966ஆம் ஆண்டு மத்திய அரசு நியமித்த ஜெ.எல்.கபூர் விசாரணை ஆணையம், சதியைப் பற்றி முழுமையாக ஆராயவில்லை. எனவே காந்தி கொலை பற்றிய முழுமையான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. 'அபினவ் பாரத்' என்ற அமைப்பைச் சார்ந்த டாக்டர் பங்கஜ் ஃபாண்டிங் என்பவர் இந்த வழக்கை தொடர்ந்துள்ளார். இவர் ஒரு ஆய்வாளர். காந்தியார் உடலில் பாய்ந்தது மூன்று குண்டுகள் மட்டுமே என்ற அடிப்படையில் போலீஸ் விசாரணை நடத்தி நாதுராம் கோட்சே, நாராயண் ஆப்தே இருவருக்கும் மரண தண்டனை விதிக்கப்பட்டது. சதித்திட்டம் தீட்டிய குற்றச்சாட்டுக்கு உள்ளான சாவர்க்கார் போதுமான சாட்சியம் இல்லை என்று கூறி விடுதலை செய்யப்பட்டார்.

"காந்தியின் உடலில் மொத்தம் 4 குண்டுகள் பாய்ந்துள்ளன. இதில் 3 குண்டுகள் கோட்சேயின் துப்பாக்கியிலிருந்து வெடித்தவை. நான்காவது குண்டு கோட்சே துப்பாக்கியில் இருந்த குண்டின் வகையைச் சார்ந்தது அல்ல. அப்படியானால், கோட்சேவைத் தவிர, வேறு ஒரு நபர் காந்தியை சுட்டிருக்கிறாரா? அவர் யார்? இது குறித்து ஏன் விசாரணை நடத்தப்படவில்லை. 4ஆவது குண்டு கோட்சே துப்பாக்கியிலிருந்து வெடித்திருக்க வாய்ப்பில்லை. காரணம், 7 குண்டுகள் போடும் கோட்சே துப்பாக்கியிலிருந்து அவர் சுட்ட 3 குண்டுகளைத் தவிர, ஏனைய 4 குண்டுகளை காவல்துறை கைப்பற்றி விட்டது. காந்தி கொலை வழக்கில் நாட்டின் மிகப் பெரும் சதி மூடி மறைக்கப்பட்டிருக்கிறது" என்று பாண்டிங் தனது மனுவில் குறிப்பிட்டுள்ளார். மனுதாரார் சாவார்க்கரின் தீவிர ஆதரவாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/16-18 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2016-2018
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# பல்லாயிரக்கணக்கான மக்களிடம் துண்டறிக்கை; நிதி திரட்டல்; சென்னையை கலக்குகிறார்கள் கழக செயல் வீரர்கள்

ஜூன் 4ஆம் தேதி சென்னையில் தமிழர் பண்பாட்டுப் பாதுகாப்பு மாநாடும், ஜூன் 5ஆம் தேதி மத்திய அரசு அலுவலகங்களில் இந்திப் பெயர் அழிப்புப் போராட்டமும் நடைபெற இருக்கிறது. சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் நிகழ்ச்சியின் வெற்றிக்கு தீவிரமாக செயல்பட்டு வருகின்றனர்.

கடந்த 10 நாள்களாக கழகத் தோழர்கள் 15 பேர் முதல் 20 பேர் கொண்ட குழு, கழகக் கொடி, கருப்புச் சட்டையுடன் நகரின் பல்வேறு பகுதிகளில் வணிகர்கள் பொது மக்களை சந்தித்து துண்டறிக்கைகளை வழங்கி, நன்கொடைகளை திரட்டி வருகிறார்கள். திருவல்லிக்கேணி, மைலாப்பூர், சைதாப்பேட்டை, கோயம்பேடு, எம்.ஜி.ஆர். நகர், புரசைவாக்கம், சிந்தாதிரிப்பேட்டை, இராயப்பேட்டை பகுதிகளில் மாலையில் தொடங்கி, இரவு வரை ஒவ்வொரு கடையாக இந்த வசூல் பணி நடந்தது.

தோழர்களிடம் பொது மக்கள் பல்வேறு கேள்விகளை எழுப்புகிறார்கள். தோழர்கள் இந்த கேள்விகளுக்கு உரிய விளக்கங்களை பொறுமையாக அளித்து வருகிறார்கள். சனி, ஞாயிறு நாள்களில் காலையிலும் வசூல் பணிகள் நடந்தன. பார்ப்பனக் கோட்டையான மயிலாப்பூரில் கபாலீசுவரர் கோயிலைச் சுற்றி நடை பாதைக் கடைகள், வணிக நிறுவனங்கள் நடத்தி வரும் மக்களிடம் நல்ல வரவேற்பு இருந்தது. நெற்றியில் மதச் சின்னம் அணிந்தவர்கள்கூட - பெரியார் மட்டும் இல்லாதிருந்தால் இந்த மயிலாப்பூர் பகுதிகளில் நாங்கள் கடைபோட்டு வியாபாரம் நடத்தியிருக்க முடியாது” என்று உணர்ச்சியுடன் பலரும் கூறி நன்கொடை வழங்கினர். பெண் தோழர்களும் வசூல் பணியில் பங்கெடுத்து வருவது பலரையும் வியப்பில் ஆழ்த்துகிறது. அவர்கள் மக்கள் கேட்கும் கேள்விக்கு பொறுமையாக விளக்கங்களை வழங்குகிறார்கள்.

துண்டறிக்கையை படித்து விட்டு, பிறகு அதில் குறிப்பிடப்பட்டுள்ள அலைபேசி எண் வழியாக தொடர்பு கொண்டு ஒவ்வொரு நாளும் கழகப் பொறுப்பாளர்களிடம் பேசுகிறார்கள். பா.ஜ.க. தரப்பிலிருந்து எதிர் வாதங்களை முன் வைக்கிறார்கள். இளைஞர்கள் கூட்டமாக ஒவ்வொரு பகுதிக்கும் சென்று துண்டறிக்கை வசூல் பணிகளில் ஈடுபடுவதை சகிக்க முடியாத பார்ப்பனர்கள், மதவாத சக்திகள், காவல் துறையிடம் புகார் தருவதும், காவல்துறையினர் கெடுபிடி காட்டினாலும் அவர்களுக்கு உரிய விளக்கங்களை தந்து கெடுபிடிகளை முறியடித்து தோழர்கள் இந்தப் பணியை தொடர்ந்து செய்து வருகிறார்கள். பொது மக்களுடன் நேரடியாக நிகழ்த்தி வரும் இந்த சந்திப்பு, தோழர்களை மிகவும் உற்சாகப்படுத்தி வருகிறது. இதுவரை 15,000 துண்டறிக்கைகள் பொது மக்களிடம் சேர்க்கப்பட்டுள்ளன.

**- நமது செய்தியாளர்**

## ஜூன் 4ஆம் தேதி கழக மாநாட்டில் நீதிபதி அரி பரந்தாமன் சிறப்புரையாற்றுகிறார்

ஜூன் 4ஆம் தேதி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் திருவான்மியூர் தெப்பக்குளம் மைதானத்தில் தாளமுத்து - நடராசன் நினைவு அரங்கில் தமிழர் பண்பாட்டுக்கு எதிரான இந்தித் திணிப்பு - நடுவண் அரசின் உரிமை பறிப்புகளைக் கண்டிக்கும் மாநாடு பிற்பகல் 4 மணி அளவில் காஞ்சி மக்கள் மன்றம் வழங்கும் பறையிசை, புரட்சிக்கர கலை நிகழ்வுகளுடன் தொடங்குகிறது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி மாநாட்டுக்கு தலைமை தாங்குகிறார்.

முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி அரி. பரந்தாமன், பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பேராசிரியர் சரசுவதி, அமைப்பு செயலாளர் இரத்தினசாமி, பொருளாளர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், வெளியீட்டு செயலாளர் இராம. இளங்கோவன், வழக்கறிஞர் திருமூர்த்தி, துரை. அருண், ஆசிரியர் சிவகாமி, காஞ்சி மக்கள் மன்றத் தோழர் மகேசு, கு. அன்பு தனைசேகர், தபசி. குமரன் ஆகியோர் உரையாற்றுகின்றனர்.

## சமூக செயல்பாட்டாளர்கள் மீது குண்டர் சட்டமா? கழகம் கடும் கண்டனம்

முள்ளிவாய்க்காலில் இனப்படுகொலைக்கு உள்ளான ஈழத் தமிழர்களுக்கு வீரவணக்கம் செலுத்த சென்னை மெரினா கடற்கரையில் திரண்ட இளைஞர்களை காவல்துறை கைது செய்தது. 17 பேர் ரிமாண்ட் செய்யப்பட்டனர். இப்போது திருமுருகன் காந்தி (மே 17) தமிழர் விடியல் கட்சியைச் சார்ந்த இளமாறன், டைசன் மற்றும் அருண் (காஞ்சி மக்கள் மன்றம்) ஆகியோர் மீது பா.ஜ.க.வின் கொத்தடிமையாக தமிழகத்தில் ஆட்சியிலிருக்கும் அ.இ.அ.தி.மு.க ஆட்சி குண்டர் சட்டத்தை ஏவி விட்டிருக்கிறது.

பிழைப்பு அரசியல் நடத்தி கோடிகோடியாக கொள்ளை அடிக்கும் ஊழல் அரசியல்வாதிகள் அதிகாரத்தில் அமர்ந்து கொண்டு , சமூக மக்களுக்காக - இனத்துக்காகப் போராடும் செயல் பாட்டாளர்களை சமூக விரோதிகளாக சித்தரித்து குண்டர் சட்டத்தை ஏவுவது வன்மையான கண்டனத்துக்கு உரியது. சட்டத்தை திரும்பப் பெற வேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் வலியுறுத்துகிறது.

# சங்கரன்கோவிலில் ‘நிமிர்வோம்’ அறிமுகக் கூட்டம்

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் நகரத்தில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய நூல் அறிமுக விழா கடந்த மே 14 அன்று அபர்ணாதேவி திருமண மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு கழக பரப்புரை செயலர் பால்.பிரபாகரன் தலைமை வகித்தார் .நெல்லை மாவட்ட தலைவர் பால்வண்ணன் முன்னிலை ஏற்றார். ஒருங்கிணைப்பு செய்த சங்கரன்கோவில் வே.இராமசாமியின் நோக்க உரையுடன் நிகழ்ச்சி தொடங்கியது . சங்கை பெரியார் தொண்டர் பா.சதாசிவம் வரவேற்புரை நல்கினார்

“பெரியார் இன்றும் என்றும்,” அண்ணல் அம்பேத்கரின் “நான் ஓர் இந்துவாக சாக மாட்டேன்” கழக மாத இதழான ‘நிமிர்வோம்’ ஆகிய நூல்கள் அறிமுகப்படுத்தப்பட்டன . ‘நிமிர்வோம்’ இதழ்கள் குறித்து மதுரை மா.பா மணிஅமுதனும், அம்பேத்கரின் “நான் ஓர் இந்துவாக சாக மாட்டேன்” நூல்குறித்து ‘தலித்முரசு’ ஆசிரியர் புனிதப்பாண்டியனும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி “பெரியார் இன்றும் என்றும்” நூல் பற்றியும் உரையாற்றினர் . பால்.பிரபாகரன் தலைமை உரை ஆற்றினார். ஆதித்தமிழர் பேரவையின் தென்னரசு, முள்ளிக்குளம் பேராசிரியர் நீலகண்டன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர் .



முன்னதாக ‘நிமிர்வோம்’ மே மாத இதழ் நிகழ்வில் வெளியிடப்பட்டது. முதல் பிரதியை கக்கன் நகர் பழனி சாமியும் மணலூர் முருகனும் கழகத் தலைவரிடமிருந்து பெற்றுக் கொண்டனர். சங்கை மோகன் - தங்கராசு மதுரை மா.பா. மணி அமுதன் விருதுநகர் ஜெயக்குமார் ஆகிய தோழர்கள் கழகத் தலைவர் கைகளால் “பெரியார் இன்றும் என்றும்” நூலைப் பெற்று மகிழ்ந்தனர். சங்கரன் கோவில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பாக ரூ.1500 கழக கட்டமைப்பு நிதியாக வழங்கப்பட்டது.

நெல்லை, விருது நகர், மதுரை, சென்னை ஆகிய மாவட்ட கழகத் தோழர்களும் நூற்றுக்கும் மேற்பட்ட பார்வையாளர்களும் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியையொட்டி சங்கரன் கோவில் வட்டார மக்களிடம் “பெரியார் இன்றும் என்றும்” நூல் நாற்பது பிரதிகளும் , “நான் ஓர் இந்துவாக சாக மாட்டேன்” எழுபது பிரதிகளும் நூற்றுக்கும் மேற்பட்ட “நிமிர்வோம்” இதழ்களும் சென்றடைந்தன .அரங்கில் வைக்கப்பட்ட இயக்க ஆதரவாளர் ஓவியர் மணியின்கம்பியால் செய்யப்பட்ட பெரியார் - அம்பேத்கர் -புத்தர் உருவ கலைப்படைப்புகள் பார்வையாளர்களை பெரிதும் கவர்ந்தது . இறுதியாக கீழப்பாவூர் அன்பரசு நன்றியுரையாற்றினார்.

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒன்றிப்போனது. சிறப்பான ஒன்றாகத் தெரிந்தது. மொழி தெரியாத நிலையிலும் இங்கு வேறொரு பயிற்சிக்கு வந்த கன்னட இந்தி இளைஞர்களிடம் ஆங்கிலத்தில் கலந்துரையாடியதும் அவர்கள் நீங்களனைவரும் உறவினர்களா எனக் கேட்க, இல்லை, உறவினர்கள் மாதிரி (not relations, like relations) என்று கூறியதும் அவர்களை வியப்பிலாழ்த்தியது. குழந்தைகள் அனைவருக்கும் கருப்பு வண்ணத்தில் ஒரு த.நா.அ.ம என்று அச்சிடப்பட்ட பனியன்கள் மயிலாடுதுறை ஜாகிர், திருப்பூர் முகில்ராசு, மாதவன் ஆகியோரால் வழங்கப்பட்டது.

பெங்களூருவிலிருந்து தொடர் வண்டியில் வரும்போது நமது குழந்தைகள் அணிந்திருந்த பனியனைப் பார்த்ததும் நமது குழந்தைகள் கடவுளின் தோற்றம், ஜாதிக் கொடுமைகள் குறித்து விவாதித்ததைப் பார்த்ததும், ஆம்பூரைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் நமது குழந்தைகளை மிகவும் பாராட்டினர். அத்துடன் தங்கள் குழந்தைகளையும் அடுத்த ஆண்டு முகாமில் கட்டாயம் சேர்த்துக் கொள்ள வேண்டுகோள் விடுத்து தொலைபேசி எண்களை வாங்கிச் சென்றனர். அக்குடும்பத்துடன் ஆசிரியர் ஒருவரும் நம்முடன் இணைந்து பணியாற்ற விருப்பம் தெரிவித்தார்.

ஐ.எஸ்.ஐ. நிறுவன மேலாளர் நமது குழந்தைகளைத் “தங்கமான பசங்க” என்றதும் குழந்தைகள் அளவில்லா மகிழ்ச்சி அடைந்தனர்.

ஆசிரியர் சிவகாமி, மற்றும் தமிழ்ச் செல்வன் ஆகியோரால் ஒருங்கிணைக் கப்பட்ட இந்த ஐந்தாம் ஆண்டு முகாம், கருத்தாளர்களின் கூட்டுறவு, உழைப்பு, தோழர்களின் உதவி, உழைப்பு பெற்றோர்களின் நம்பிக்கை, ஒத்துழைப்பு ஆகியவற்றை வெளிக் காட்டும் விழாவாகவும், தொடர்ந்து செல்ல வேண்டிய திசையை நமக்கு சுட்டிக் காட்டிய முகாமாகவும் அமைந்தது.

***செய்தி: ஆசிரியர் சிவகாமி (தமிழ்நாடு அறிவியல் மன்ற ஒருங்கிணைப்பாளர்)***

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 01st June 2017

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN